<u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **132** இல் காணப்படும் பழமொழிகளையும் அதன் பொருளையும் அறிதல். அதோடு, பக்கம் **132** இல் காணப்படும் இடுபணி **2**, பக்கம் **133** இல் காணப்படும் இடுபணி **3** பயிற்சிகளைச் செய்தல். உங்கள் விடைகளைத் தொலைவரியில் அனுப்பவும். இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) ஞாயிறு இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

தொகுதி 14

# பாடம் 4 செய்யுளும் மொழியணியும்

## பழமொழிகள் அறிக.

1. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.
   கடல் கடந்து சென்றும் செல்வம் தேட வேண்டும்.

2. கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
   கடுகு அளவில் சிறிதானாலும் அதனிடம் இயற்கையாகவே இருக்கின்ற காரம் போகாது. அதுபோல சிலர் உருவத்தில் சிறிதாக இருந்தாலும் ஆற்றல் மிக்கவர்களாக இருப்பார்கள்.

3. ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
   குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையோடு செயல்படாவிட்டால் அழிவுக்கு வழிவகுத்து விடும்.

4. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.
   நாம் கற்றறிந்தது மிகச் சிலவே; இன்னும் கற்க வேண்டியவை நிறைய உள்ளன.

5. குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
   சம்பாதித்ததை மேலும் விருத்தி பண்ணாமல் சும்மாயிருந்து எடுத்துச் செலவு செய்தால், குன்று போல குவிந்திருந்த செல்வமும் நாளடைவில் இல்லாமல் போகும்.

### இடுபணி 1

**கற்ற பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் மனனம் செய்து கூறுக; எழுதுக.**

### இடுபணி 2

**பழமொழிகளைப் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.**

- ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்.
- கடுகு சிறுத்தாலும் காரம் போகாது.
- கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு.
- குந்தித் தின்றால் குன்றும் மாளும்.
- திரை கடல் ஓடியும் திரவியம் தேடு.

4.7.6 நான்காம் படிவத்திற்கான பழமொழிகளையும் அவற்றின் பொருளையும் அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

இடுபணி 3

**கீழ்க்காணும் வாக்கியங்களுக்கு ஏற்ற பழமொழிகளை எழுதுக.**

1. சுந்தரம் வெளிநாட்டில் பணிபுரிய எண்ணம் கொண்டான். அதனால் வறுமையில் வாடும் தன் குடும்பத்தினரின் நிலை மாறும் என நம்பினான். அந்த வெளிநாட்டு வேலையைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வெளிநாட்டிற்குப் புறப்பட்டான்.
2. ஏழு வயது நிரம்பிய ஸ்ரீ அபிராமி உலகளவில் நடைபெற்ற பனிச்சறுக்குப் போட்டியில் பங்கெடுத்து நாட்டிற்குப் பல பதக்கங்களைப் பெற்றுத் தந்துள்ளார்.
3. திருமதி கவிமலர் தமிழ் இலக்கியத் துறையில் முனைவர் பட்டம் படித்து முடித்த பின்பும் தொடர்ந்து பல ஆய்வுகளுக்காகத் தமது வாழ்நாளை நூலகத்திலேயே கழித்து வருகிறார்.
4. ஏழு தலைமுறைக்குச் செலவு செய்யுமளவு செல்வம் கொட்டிக் கிடந்தாலும், தனக்கென ஒரு நிரந்தர வேலையும் ஊதியமும் வேண்டுமென்று அரவிந்தன் வேலை தேடி வருகிறான்.
5. கடந்த வாரம் திருமணமான புதுமணத் தம்பதிகளிடையே புரிந்துணர்வு இல்லாமையால் வாக்கு வாதம் ஏற்பட்டது.

வளப்படுத்துதல்

**கீழ்க்காணும் பழமொழிகளில் ஏதேனும் ஒரு பழமொழியைத் தெரிவு செய்து சூழல் எழுதுக.**

| ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும். | கடுகு சிறுத்தாலும் காரம் போகாது. |
|---|---|

**எடுத்துக்காட்டு:**

தம்போய், ஜொகூர் வட்டார இளைஞர்கள் மத்தியில் நிகழ்த்தப்பட்ட ஆய்வில் அதிகமான இளைஞர்கள் தனது அண்டை நாடான சிங்கப்பூரில் வேலை செய்வதாக முடிவுகள் கிடைக்கப்பெற்றன. ஜொகூர் வட்டார இளைஞர்கள் தமது குடும்ப வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளவும் வளமான வாழ்விற்காகவும் **திரை கடல் ஓடியும் திரவியம் தேடு** என்பதற்கொப்ப சிங்கப்பூர் வேலைக்குச் சென்று கடுமையாக உழைக்கின்றனர் என ஆய்வாளார் குமார் தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

குறைநீக்கல்

**பழமொழிகளைச் சரியாக நிரல்படுத்தி எழுதிடுக; வாசித்திடுக.**

1. கடல் | திரை | தேடு | ஓடியும் | திரவியம்
2. கற்றது | அளவு | கைம்மண் | கல்லாதது | உலகளவு
3. காரம் | சிறுத்தாலும் | போகாது | கடுகு

தொகுதி 14